ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# தொல்காப்பியர் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள்

*முனைவர்.வி.இமயராஜா*
*பேராசிரியர் . தமிழ்த்துறை*
*நாசரேத் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஆவடி சென்னை – 62*

ஆய்வுச் சுருக்கம்

தொல்காப்பியம் அனைத்து இலக்கணத்திற்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது. தொல்காப்பியத்தில் அகத்திணை குறித்தும், களவில் கூற்று நிகழ்த்துவர் மற்றும் கூற்று நிகழ்த்துவதற்கு தகுதியற்றவர் யார் என்றும், உரைக்கப்பட்டுள்ளது. மற்றும் களவவொழுக்கம் எனும் பிரிவில் நான்கு கூறுகள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கற்பியல் என்பது களவியலின் அடுத்த நிலையாகவும், அதனின் ஆறு கூறுகள் பற்றியும் சொல்லப்பட்டுள்ளன. மேலும் திருமணம் எப்பொழுது எப்படி யாரால் தோற்றுவிக்கப்படுகிறது என்பதனையும் கற்பியலில் ஊடல் தோன்றுவது, அதனால் ஏற்படும் விளைவுகள் என்ன என்பதையும் தெரிவிக்கின்றது. உலகில் எப்படி எல்லாம் தன் விருப்பப்படி மக்கள் வாழ்ந்த காலத்தில் இப்படி தான் வாழ வேண்டும் என்ற அக வாழ்க்கை நெறியினை தொல்காப்பியர் வழி எடுத்துரைப்பது ஆய்வின் நோக்கமாகும்.

மனிதன் தான் வாழ்ந்த காலங்களை கலங்கரை விளக்கமாக சமூகத்தில் நிலைநிறுத்த வேண்டுமானால் உயரிய சிந்தனையுடைய வாழ்க்கையை வாழ்தல் வேண்டும் . தனி மனிதன் பண்பு நிறைந்தவனாக வாழும் போது அவனை சூழ்ந்து இருக்கும் சமூகம் ஆற்றல் படைத்த சமூகமாக விளங்கும். சமூகம் தன்னிறைவு பெற்று விளங்கும் போது தான் இவ்வுலகம் தன்னிறவு பெறும் என்பதில் சந்தேகம் இல்லை .பழங்காலம் பொற்காலம் என போற்றப்பட்டதற்கு காரணம் ஒரு மனிதன் மட்டுமல்ல ஒட்டுமொத்த சமூகமே அறவழக்கையை உயிராக கொண்டு வாழ்நநதனர்.

உலகில் உள்ள பழமொழி இலக்கணங்கள் எழுத்து, சொல் மட்டுமே குறித்து பேசி உள்ளன. ஆனால் தமிழில் உள்ள தொல்காப்பிய இலக்கணத்தில் எழுத்து, சொல் என்பதோடு நின்று விடாமல் பொருள் என்னும் தனித்த இலக்கணத்தை முன் வைத்துள்ளது. இப்பகுதி தொல்காப்பிய தமிழரின் வாழ்வியல் நெறிகளை சொல்லியுள்ள திறத்தினை காணலாம்.

## அகத்திணை

தொல்காப்பியர் எழுத்துக் குறித்து எழுத்தறி காரத்திலும், சொல் குறித்து சொல் லதிகாரத்திலும் தெளிவாக தன்னுடைய, தனக்கு முன்பு இருந்த வழக்காடறுகள், கொள்கைகள் குறித்து எழுதி உள்ளார். தமிழரின் வாழ்வியல்நெறி குறித்து பொருள் அதிகாரம் என்னும் பிரிவினுல் திறம்பட எடுத்துரைத்துள்ளார்.

பொருள் அதிகாரம் வெறும் மொழிக்கும் மொழியாலாகிய இலக்கியத்திற்கும் மட்டும் இலக்கணம் வகுக்க வில்லை. அம் மொழியை பேசும் மக்களுக்கும் அவர்கள் வாழ்க்கை முறைக்கும் கூட இலக்கணம் வகுத்தது .தமிழ் இலக்கணம் பொருளுக்கு விளக்கம் தருகின்றது ஆம் வாழ்க்கைக்கு விளக்கம் தருகிறது பொருள் எனினும் வாழ்க்கையெனினும் ஒரே பொருள் தரும். வாழ்க்கை கூறிய இலக்கணத்தை சொல்லும் பகுதி தமிழில் பொருள் இலக்கணம் என்றும் இலக்கியம் வாழ்க்கையைப் பற்றி கூறுகின்றது எனினும் அதனிலிருந்து இலக்கணங்களும் வாழ்க்கையை பிரதிபலிக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

பொருள் அதிகாரத்தில் அதிகமான இயல்புகளை கொண்டதாக அகப்பொருள் விளங்குகிறது .பொருள் அதிகாரத்தின் முதல் இயல் அகம் தொடர்பான செய்திகளை நன்கு அறிந்து கொள்ள உதவும் அடிப்படையாக அமைகிறது.

அகம்

அகத்திணை இயல் களவியல் ,கற்பியல், பொருளியல் என்பவை அகத்தோடு தொடர்புடையன. மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல் போன்ற இயல்கள் அகம் ,புறம் இரண்டிற்கும் பொதுவானதாக உள்ளது . ஆக ஏழு இயல்களில் அகம் தொடர்பான செய்திகளைச் சொல்வனமாக உள்ளன .அகம் என்பது ஒத்த பண்பு கொண்ட ஒருவனும், ஒருத்தியும் தம்முள் கொள்ளும் அன்பு முறையாகும். அது புணர்தல் ,பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் ஆகியவற்றின் அடிப்படையில் அமைவது. அது தனித்த ஒருவனுக்கு மட்டும் அன்று உலக மக்கள் யாவருக்கும் பொதுவானது. அது ஏழு திணைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவை கைக்கிளை அன்பின் ஐந்திணை பெருந்திணை என்பவனாகும். இதனை,

" கைக்கிளை முதலாம் பெருந்திணை யிறுவாய்
முற்படக் கிளர்ந்த எழுதிணை என்ப" 1

என்ற நூற்பா விளக்குகின்றது.

அகப் பாடல்கள் அகமாந்தர்கள் சொல்வதாக அமையும். பேசுகின்ற முறை, கூற்று எனப்படும். அகத்திணை இயலில், கூற்று நிகழ்த்துவதற்குரியவர் களவியல் , கற்பியல் என்ற இயல்களில் அகத்திணை மாந்தர் கூற்று நிகழ்த்துபவர்களாக செய்யுளியல் 1445,1446 வது நூற்பாவின் வழி உரைத்துள்ளமையை அறிய முடிகின்றது.

களவொழுக்கம்

ஒத்த குலமும் ஒத்த பண்புடைய காதலர்கள் ஒன்றுபட்டு தாமே சேர்ந்து மறைந்து கொண்டு இல்லறம் நடத்தும் உலகியல் வாழ்வியல் கூறுகளை கூறுவது களவியலும், கற்பியலும் ஆகும். கள ஒழுக்கத்தின் முறையைக் கூறுவது களவியல் ஆகும்.

புணர்ச்சி

ஒத்த குலமும் ஒத்த பண்புடைய காதல் இருவர் ஊழ்வலியால் தற்செயலாய் தாமே கண்டு கூடி இன்புறுதலே இயற்கை புணர்ச்சியாகும் . காதலர் இருவருள் காதலன் ,காதலி தலைவியை விட குலத்திலும் பண்பிலும் மிக்கவனாக இருப்பினும் தவறில்லை.

"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோன் ஆயினும் கடிவரை யின்றே" 2.

என்ற நூற்பா மேற் சொன்ன கருத்திற்கு அரனாக உள்ளது.

களவியலில் தலைவன்

ஊழ் வழியாய் தலைவியை எதிர்ப்பட்ட பொழுது அவள் அழகு சிறப்பை கண்டு வியந்து அவள் மானிடப் பெண் அல்லல் .தெய்வம் என்று சந்தேகிப்பான் அவள் அணிந்த மலரின் வண்டு மொய்த்தல், அவள் கண் அணிந்துள்ள அணிகலன் கண்ணிமைத்தல், ஆண்மகனை கண்டு அஞ்சுதல் போன்ற செயல்களால் அவள் மானிடப் பெண்ணே என்று தன் ஐயம் தவிப்பான் .பின்னர் அவள் கண் பார்வையில் அவள் குறிப்புணர்ந்து அவளை நெருங்கி மெய் தொட்டு பயிறல் போன்ற சில செயல்களால் இருவரும் உள்ள ஒத்த பண்பினராக கூடியின்புறுவர். பின்னர் பாங்கனிடம் கூறுதல் தலைவியின் உயிர் தோழியை அறிதல் .தோழியை பின் நின்று வேண்டல், தலைவனை அடைந்து கூடி மகிழ்ந்து இன்பம் பெறல் போன்ற காலங்களிலும் தலைவியை பிரியும் பொழுது கலங்குதல் ஆகிய நிலைகளிலும் தலைவன் பேசும் நிலை களவு வாழ்க்கையில் இடம் பெறும். தலைவியை பெறாது காமம் கைமிக்க விடுத்து மடலேறுவதாகத் தலைவன் கூறுவதும் உண்டு.

தலைவி

தலைவனை எதிர்கொண்ட பொழுது தலைவனுக்கு நிகழ்ந்த ஐயம் தலைவிக்கு நிகழாது .தலைவிக்கு ஐயம் நிகழ்ந்தால் அவளுக்கு அச்சம் தோன்றும் அது இயற்கை புணர்ச்சிக்கு தடையாகும் .தலைவி நாணமும் ,மடனும் உடையவளாதலின் களவொழுக்கத்தில் குறிப்பால் அறிவித்தல் இன்றி வெளிப்படையாக தன் விருப்பத்தைக் கூற மாட்டாள்.

பாங்கன்

தலைவனின் உயிர் தோழன் பாங்கர் ஆவான். தலைவனின் இரகசியங்களை எல்லாம் அறிந்த இயல்புடையவன். தலைவனும் தன் செயல்களை அவனிடம் கூறி அவன் மூலம் தலைவியை அடைதல் போன்ற நன்மைகளை பெறுவான்.

தோழி

தலைவியின் செவிலி தாயின் மகள் தோழியாவாள். பாட்டிக்கு த்தலைவியின் செவிலி தாயின் தாய் உயிர் தோழியாகவும் , தாய்க்கு செவிலிதாய் உயிர் தோழியாகவும், தனக்கு அச்செவிலித் தாயின் மகள் தோழியாகவும் வருவது தாய் த்தாய் க்கொண்டு உயிர் ஒன்றாய் வரும் நிலையாகும். ஐந்திணையில் தோழியின் பங்கு மிகச்சிறந்தது. முக்கியமானது இயற்கை புணர்ச்சி அறிந்து தோழியர் கூட்டத்திற்கு உதவுதல் முதல் மணம் புரிந்து கொண்டு தலைவி தலைவன் இல்லம் செல்லும் வரை அவள் பணி முக்கியமானது. உடன் போக்கு போன்ற எல்லாம் குடும்ப பண்பிற்கும் பெருமைக்கும் இழுக்கு ஏற்படாதவாறு பணியாற்ற வேண்டிய பெரும் பொறுப்பினை உடைகளாக தோழி விளங்குகிறாள்.

செவிலி

நற்றாயின் தோழி செவிலியாவாள். நற்றாய் போல் இருந்து தலைவியின் களவெழுக்கத்தை தன் மகள் மூலம் உணர்ந்து தானும் ஆய்ந்து அறிந்து, கவன்று, தலைவியை காக்க வேண்டிய முறையில் காத்து, நற்றாய்க்கு கடமை மரபினை உணர்த்தி அவள் மூலம் தந்தைக்கும் தன் தமையன்மாருக்கும் உணர்த்தும் இயல்புடையவளாவாள்.

நற்றாய்

தலைவியின் தாய் நன்றாய் ஆவாள்.தன் அய்யத்தினாலும் செவிலியின் மூலமும் தன் மகளின் களவெழுக்கத்தினை உணர்பவள் நற்றாய். செவிலியைப் போலவே அதற்காக வருந்துவாள். தந்தைக்கும், தமையன்மாருக்கும் குறிப்பினால் களவெழுக்கத் தினை உணர்த்துவாள். தந்தையைப் போலவே தமையன்மாரைப் போலவே சினம் கொள்ள மாட்டாள்.

தந்தை

தலைவியின் தந்தை நற்றாய்க் குறிப்பால் உணர்த்த மகளின் கள ஒழுக்கத்தினை உணர்ந்த பொழுது சினமடைவான். பின்னர் ஆறுதல் அடைந்து மனதிற்கு வேண்டிய செயல்களில் ஈடுபடுவான்.

மணம்

களவு வெளிப்படுவதற்கு முன் வரைதல், வெளிப்பட்ட பின்னர் வரைதல் என மணம் இருவகையில் திகழ்கின்றது. உடன் போக்கு தோன்றும் காலங்களில் மணம் தலைவன் இல்லத்திலேயே நிகழவதும் உண்டு. அல்லது திரும்ப வந்து தலைவியின் இல்லத்தில் நிகழ்வதும் உண்டு.

கற்பியல் ஆறு வகையான பொருண்மையைக் கொண்டது. அவை மணம், கூற்று, ஊடல், அலர், பிரிவு ,தவம் என்பவனாகும்.

கற்பு என்பது கரணத்தின் (மணம்) அடிப்படையால் அமைவது .கரணம் கொடுப்போர்க்கும் கொள்வோருக்கும் இடையில் நடப்பதாகும். கொடுப்பவர் உடன்படாவிட்டால் தலைமக்கள் தாங்களே கரணம் செய்து வாழ்வதுண்டு.

கரணம் தோன்றக் காரணம்

பொய்யும் வழுவும் (குற்றம்) தோன்றிய பொழுது அதனைக் கட்டுப்படுத்த பெற்றோர்களால் நிகழ்த்தப்பட்ட அமைப்பே காரணமாகும். இக்கரணம் மேலோர் என்று சொல்லப்பட்ட அந்தணர், அரசர், வணிகர் என்ற மூவருக்கும் மற்றும் நிகழ்த்தப்பட்டு பின்னர் கீழோர் என்கின்ற வேளாளருக்கும் நிகழ்த்தப்பட்டுள்ளது. இதனை களவியல் ஒன்று முதல் நான்கு வரை உள்ள நூற்பாக்கள் வழி அறிய முடிகின்றது.

*கற்பு எனப்படுவது கரணமொடு புணரக்*
*கொளற்குறரி மரபின் கிழவன் கிழத்தியைக்*
*கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே. 3*

*கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே*
*புணர்ந்து உடன் போகிய காலையான 4*
என்ற நூற்பாக்கள் வழி அறிய முடிகின்றது.

ஊடல்

தலைவனது குறிப்பை அறிதல் வேண்டியும் , தலைவி தனது ஊடலை நீக்கும் நிலையிலும் உறவின்மையை புலப்படுத்தும் சொற்களை கூறி தலைவி ஊடல் செய்வாள்.

*" அவன் குறிப்பு அறிதல் வேண்டியும், கிழவி*
*அகன் மலி ஊடல் அகற்சிக் கண்ணும்*
*வேற்றுமைக் கிளவி தோற்றவும் பெறுமே" 5*
என்ற நூற்பாக்களின் வழி உணரலாம்.

அலர்

தலைவன், தலைவியரிடத்துள்ள காதல் ஒழுக்கத்தைப் பற்றி ஊர் மக்கள் பேசுகின்ற பேச்சு அலர் ஆகும் .களவு, கற்பு காலத்தில் அலர் ஏற்படும். "களவு கற்பும் அலர் வரைவு இன்றே"6 இவ்வாறு மக்கள் பேசுகின்ற பேச்சினால் இருவருக்கும் அன்பு, காமம் அதிகமாகும்.

*"அலரின் தோன்றும் காமத்தின் சிறப்பே" 7*

தலைவன் பரத்தையர் சேரியில் ஆடியும், பாடியும் கண்டும் கேட்டும் இன்பம் நுகரும் விளையாட்டின் போதும் அலர் தோன்றும்.

*" கிழவோன் விளையாட்டு ஆங்கும் அற்றே " 8*
போன்ற நூற்பாக்களின் வழி அலர், அலரினால் ஏற்படும் விளைவுகளினை அறிய முடிகின்றது.

தவம்

தலைவன் ,தலைவி காதலித்த பின்பு கரணம் செய்து, இன்பமாக முழுமையான வாழ்க்கை நடத்திய பிறகு தவம் மேற்கொண்டதாக தொல்காப்பியர் உரைத்துள்ளார். இச்செய்தியினை,

*"யாமம் சான்ற கடைக் கோட் காலை*
*ஏமம் சான்ற மக்களோடு துவன்றி*
*அறம் புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்*
*சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"9*
என்ற நூற்பா மூலம் அறிய முடிகிறது.

தொகுப்புரை

தொல்காப்பியத்தில் களவியல் கூற்று நிகழ்த்துபவர் யார் என்றும் ,சார்பில் கூற்று நிகழ்த்துபவர் யார் என்றும், கூற்று நிகழ்த்துவதற்கு தகுதியற்றவர் யார் என்றும் உரைக்கப்பட்டுள்ளது. களவெழுக்கம் என்னும் பிரிவில் நான்கு கூறுகள் குறித்து விளக்கப்பட்டுள்ளது. கற்பியல் என்பது களவியலின் அடுத்த கட்டம் அதன் 6 கூறுகள் குறித்தும் விளக்கமாக சொல்லப்பட்டுள்ளன. திருமணம் எப்பொழுது எப்படி யாரால் தோற்றுவிக்கப்பட்டது என்பது குறித்து களவியல் ,கற்பியலில் எவ்வாறு ஊடல் தோன்றுகின்றது. இதனால் விளைவது என்ன என்பது விளக்கப்பட்டுள்ளது. உலகில் எப்படி வேண்டுமானாலும்

*தன் விருப்பப்படி வாழ்ந்த காலத்தில் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற வாழ்க்கை நெறியான தொல்காப்பியர் கால மக்கள் பின்பற்றினர் என்பதை தொல்காப்பியம் வழி காண முடிகிறது.*

மேற்கோள்கள்:

1. தொல். நூற்பா - 947
2. மேலது-1039
3. மேலது-1088
4. மேலது-1089
5. மேலது-1105
6. மேலது-1108
7. மேலது-1109
8. மேலது-1110
9. மேலது-1138

*துணை நூற்பட்டியல்:*

*1. தமிழ் இலக்கியத்தில் அகப்பொருள் மரபுகள் ஒரு வரலாற்று பார்வை தா.வசந்தாள், சென்னைப் பல்கலைக்கழகம் ,முதல் பதிப்பு-1990*

*2. தொல்காப்பியம் தெளிவுரை, ச.வே சுப்ரமணியன் மணிவாசகம் பதிப்பகம், சென்னை. ஆறாம் பதிப்பு - 2003*

*3. தொல்காப்பியம் உரைவளம் பொருள் அதிகாரம், அகத்திணை யியல், பதிப்பாசிரியர் ஆ .சிவலிங்கனார் தரமணி , சென்னை. முதல் பதிப்பு - 1991*

*4. தொல்காப்பியம் உரைவளம் பொருள் அதிகாரம் களவியல், தொகுப்பாளர் ஆ. சிவலிங்கனார், தரமணி சென்னை. முதல் பதிப்பு - 1994.*

*5. தொல்காப்பியம் உரைவலம் பொருள் அதிகாரம், கற்பியல், தொகுப்பாளர் ஆ. சிவலிங்கனார், தரமணி சென்னை .முதல் பதிப்பு - 1993.*

*6. தொல்காப்பியச் சிந்தனைகள். ச.மெ மீனாட்சி சோமசுந்தரம், மெய்யப்பன் பதிப்பகம். 53, புதுத்தெரு , சிதம்பரம்-608001.*

********* ********* ********** ********* ********* ********** ********** **********